திரு. சோ. அழகர்சாமி: எல்லா நிபந்தனைகளையும் தளர்த்திவிட்டோம் என்று சொல்கிறார்கள். இரண்டு கோடி தான் இதுவரை செலவழிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 26 கோடி செலவழிக்கப்படாமல் இருக்கிறது என்று நினைக்கிறேன். இப்படி கொடுக்கமுடியாமல் பணத்தை வைத்திருப்பதால், விவசாயிகள் நம்முடைய அரசாங்கத்திடம் இருந்து பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்களே, அந்தக் கடன்களை ஈடு செய்வதற்கு உலக வங்கி நிதியிலிருந்து கடன் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: முதல் பகுதியிலே 2 கோடிதான் கொடுத்திருக்கிறீர்கள், இன்னும் 26 கோடியை எப்படிக் கொடுக்கப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாகக் கொடுக்க முடியும். இப்போது விதிமுறைகள் எல்லாம் தளர்த்தப்பட்டிருப்பதனால் கொடுக்க முடியும். ஒரு மூன்று மாதம் கழித்து இதே கேள்வியைக் கேட்டால் 10, 15 கோடி கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலை ஏற்படும். பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு இந்த நிதியிலிருந்து கடன் கொடுக்கப்படுமா என்று இரண்டாவது பகுதியில் கேட்டிருக்கிறார்கள். விவசாய காரியங்களுக்காகக் கடன் பெற்றிருந்தால் அதைத் திருப்பிச் செலுத்த கடன் கொடுக்கலாம். ஆனால் திருமணத்திற்கு, வீடு கட்டுவதற்கு, படிப்புச் செலவுக்கு போன்ற சொந்தக் காரியங்களுக்காக வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு நிலவள வங்கியிலிருந்து கடன் கொடுக்க முடியாது.

திரு. தி. ஒ. பெரியசாமி: தலைவரவர்களே, உலக வங்கியிலிருந்து குறைந்த வட்டிக்கு கடனைப் பெற்று, விவசாயிகளுக்கு அதிகமான வட்டிக்குக் கொடுக்கப்படுகிறது என்று பிரச்சாரம் செய்யப்படுகிறதே. அதைப்பற்றி அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, உலக வங்கியிலிருந்து கடன் கொடுக்கப்படுவது இந்திய அரசுக்கு—அதாவது மத்திய அரசுக்கு. மத்திய அரசுக்கு ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாக முக்கால் சதவிகித வட்டிக்கு 50 ஆண்டு காலத்திற்குக் கொடுக்கிறார்கள். மத்திய அரசு அதைப் பெற்று நமக்கு கொடுக்கின்றபோது 6½ சதவிகிதம் வட்டிக்கு 12 ஆண்டு காலத்திற்கு கொடுக்கிறது. ஆகையால் வட்டி விகிதம் ஏறிவிடுகிறது.

Branch Land Development Banks

*593 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there are proposals under the consideration of the Government to open branches for

Land Development Banks in Kanyakumari district to assist small farmers ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இல்லை.

10–00 மு.ப. **திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் ஏரியாவில் லேண்டு டெவலப்மெண்டு பாங்கின் கிளை இல்லாத குறை இருக்கிறது. உடனே அங்கு ஒரு கிளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, கிள்ளியூரில் கிளை திறக்கப்பட்டிருக்கிறது. தக்கலை நிலவள வங்கியின் கிளையாகத் திறக்கப்பட்டு விட்டது என்று எனது குறிப்பு இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, தக்கலையானது வேறு ஒரு தாலுகாவிலும் வேறு ஒரு ஒன்றியத்திலும் இருக்கிறது. கிள்ளியூர் விளவங்கோடு தாலுகாவில் இருக்கிறது. இதைப் புனர்பரிசிலனை செய்து கிள்ளியூரில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, கிள்ளியூரில் ஒரு நிலவள வங்கிக் கிளை இருக்கிறது. கிள்ளியூர் கிளையை விளவங்கோட்டில் இருக்கப்பட்ட அந்த வங்கியோடு சேர்க்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, கிள்ளியூர் யூனியன் ஏரியாப் பகுதியில் அவ்விதமான கிளை திறக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, கிள்ளியூர் ஒன்றியப் பகுதியில் திறக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இப்போது கிள்ளியூர் யூனியன் ஏரியாப் பகுதியில் அவ்விதமான கிளை திறக்கப்படவில்லை. கிள்ளியூரில் கிளை திறக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இங்கே இருக்கிற குறிப்பின்படி கிள்ளியூரில்தான்

one each for Killiyur and Malapuram have been started

என்று இருக்கிறது. கிள்ளியூர் ஒன்றியப் பகுதியில் அல்லாமல் வேறு எந்தப் பகுதியில் இருக்கிறது என்று கேட்கிறேன். கிள்ளியூர் கிளை அது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, இங்கே கேள்வி கேட்ட உறுப்பினர் கிள்ளியூர் ஒன்றியத் தலைவராவார்கள். அவர் சொல்கிருர், அந்த

1973 மார்ச் 31]

எல்லைக்குள்ளே அந்த வங்கி திறக்கப்படவில்லையென்று. அவர் சொல்வது உண்மையா? அல்லது அமைச்சரவர்கள் கிளை இருக்கிறது என்று சொல்கிற தகவல் உண்மையா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, நான் சொன்னது கிள்ளியூர் ஒன்றியப் பகுதியில் ஒரு நில வள வங்கியின் கிளை திறக்கப்பட்டிருக்கிறது. அதை உறுப்பினர் அவர்கள் மறுக்கிறார்களாவென்று கேட்கிறேன். அதை எழுதி வேண்டுமானாலும் அனுப்ப முடியும். கிள்ளியூர் ஒன்றியத்தின் ஒரு பகுதியில் ஒரு கிளை திறக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, கிள்ளியூர் யூனியன் விளவங்கோடு தாலுகாவில் இருக்கிறது. தக்கலை கல்குளம் தாலுகாவில் இருக்கிறது. கிளை கிள்ளியூர் யூனியன் பகுதியில் திறக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் ஒரு வேளை கிளைக்கும், பிரதம வங்கிக்கும் உள்ள வித்தியாசம் தெரியாத குழப்பத்தில் கேட்கிறார் என்று நினைக்கிறேன். கிள்ளியூர் ஒன்றியப் பகுதியில் கிளை திறக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கிளை இப்போது தக்கலை கிளையாக இருக்கிறது. தக்கலை கல்குளம் வட்டத்தில் உள்ளது என்று தெரியும். கிள்ளியூர் ஒன்றியப் பகுதியில் திறக்கப்பட்டிருக்கிறது. அதை விளவங்கோட்டில் உள்ள அந்த வங்கியோடு சேர்க்கவேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்களுக்கு திருப்தி எற்பட்டதா?

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நிலவள வங்கிகளைத் தொடங்கும் போது அந்தப் பிரதேசத்திலுள்ள சட்டமன்ற ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த ஊருக்கெல்லாம் போக வேண்டாம். அப்புறம் எல்லோரும் கேட்க ஆரம்பித்து விடுவார்கள்.

ஓட்டல் தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள்

* 594 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ஓட்டல்களில் பணியாற்றும் குறைந்த வருவாய் உடைய தொழிலாளர் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித்தரும் சிறப்புத் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?